03.10.2024. RR.L.A.O.P.No.54/2021

P.W.1 - Rajeshkumar

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை

நில ஆர்ஜித துறையில் இருந்து இந்த வழக்கு எதற்காக தொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். என்னுடைய சொத்தின் ச.எண்.271/2D1. மொத்தம் 40 சென்ட் விஸ்தீரணம் ஆகும். அந்த இடத்தில் 475 சதுர மீட்டர் (5112 சதுர அடிகள்) நில ஆர்ஜிதம் செய்தார்கள். நில ஆர்ஜித சட்டம் 2013 ன்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு என்னை மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை செய்தார் என்றால் அவ்வாறு விசாரிக்கவில்லை. முதல்முறை என்னை விசாரித்து இடைக்கால நஷ்டஈடாக சதுர அடிக்கு 99.96 என்று நிர்ணயம் செய்து மொத்த இடத்திற்கு ரூ.8,65,901/- வழங்கினார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு இறுதிநிலை தீர்ப்பாணையில் என்னுடைய சொத்தின் மதிப்பு ரூ.1,22,745.51 என்று நிர்ணயம் செய்யப்பட்டு அதிக தொகை ரூ.7,43,155/- கொடுத்ததை என்னிடம் கேட்டு உத்தரவானது என்றால் அந்த விசாரணைக்கு என்னை அழைத்து விசாரிக்கவில்லை. பிரவு 15 அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கான சந்தை மதிப்பை மதிப்பீடு செய்து அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி தான் என்னுடைய சொத்திற்கான நஷ்டஈட்டு தொகை இறுதிதீர்ப்பாணையில் நிர்ணயம் செய்யப்பட்டது என்றும், என்னுடைய

வழக்கு தொகையில் சொல்லியவாறு எனக்கு எந்தஒரு நிவாரணத் தொகையும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2024.10.03 15:49:22 +0530